(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **170**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 யூன் 06, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. நீல் இத்தவல, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாகரின் அறிவித்தல்கள்* :** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,—

I

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் '**தேருநர்களை பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்)**' எனும் சட்டமூலத்திற்கெதிராக ஆற்றுப்படுத்தப்பட்ட மனு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு '**உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆள்**' என்பதன் வரைவிலக்கணத்தில் பிழைதிருத்தத்தினை மேற்கொள்ளுமிடத்து இச் சட்டமூலம் முழுமையாகவோ அல்லது இச் சட்டமூலத்தின் எந்தவொரு ஏற்பாடுகளுமோ அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

II

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் '**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)**' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பிரதியொன்று எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**2. *பத்திரங்கள் சமர்ப்பணம்:*** (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயற்திறன் அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான அரச கணக்குகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iv) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ், மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 திசெம்பர் 15 ஆம் திகதிய 1997/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 992); மற்றும்

(v) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ், சாராய உரிம பத்திரக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 திசெம்பர் 20 ஆம் திகதிய 1998/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 994)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகள் மற்றும் அறிவித்தல்களை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் உளவியல் துறையை நிறுவுவது தொடர்பில் ஆக்கப்பட்டு, 2017 ஏப்பிறல் 19 ஆம் திகதிய 2015/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கதிரியக்கத் துறையை நிறுவுவது தொடர்பில் ஆக்கப்பட்டு, 2017 ஏப்பிறல் 19 ஆம் திகதிய 2015/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அக்கட்டளைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்ட செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான மொணறாகல மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள்;

(iv) 2016 ஆம் ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்று அறிக்கையும் கணக்கறிக்கையும்; மற்றும்

(v) 2016 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வருடாந்த செயற்திறன் அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. மனுக்கள்:**

(1) கொழும்பு 07, மரீனா எவன்யூ, இல. 03 இல் வதியும் திருமதி மனோஜா சமரவீரவினது 2017.04.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுஜீவ சேனசிங்க சமர்ப்பித்தார்.

(2) (i) மெத மஹநுவர, மொரகஹமுல, இல. 94/2 இல் வதியும் திரு. ஏ.ஜி. தர்மசேனவினது 2017.03.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கல்வெட்டிகந்த, அளுத்கெதர, இல. 115 இல் வதியும் திரு. ஏ.எம்.எஸ். அதிகாரியினது 2017.04.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) உடதும்பர, பொப்பிட்டிய, ஒயதென்னவில் வதியும் செல்வி ஈ.எம். ரன்மல் குமாரி ஏக்கநாயக்கவினது 2017.04.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) உடதும்பர, போபிட்டிய, ஒயதென்ன, இல. 47 இல் வதியும் திரு. ஈ.எம்.பி.டப்ளியூ.எல்.பீ. ஏக்கநாயக்கவினது 2017.04.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(v) பேராதெனிய, அங்குணாவல, இல. 335/3 இல் வதியும் திரு. கே.எம்.பி.சீ. பண்டாரவினது 2017.05.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ லக்கி ஜயவர்தன சமர்ப்பித்தார்.

(3) தித்தபத்தர, சமணபெத்த, இல. 238 இல் வதியும் திரு. ஆர்.எம்.டி. சிரிசேனவினது 2016.12.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹர்ஷன ராஜகருணா சமர்ப்பித்தார்.

(4) கலேவெல, பம்பரகஸ்வெவ, கட்டுபொத்த, இல. 401 இல் வதியும் திருமதி பீ.டப்ளியூ.டி.எம்.கே. தர்மகீர்த்தியினது 2017.04.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன சமர்ப்பித்தார்.

(5) புலத்கொஹுபிட்டிய, வியலபிட்டியவில் வதியும் திரு. கே.ஜி.எம். திசாநாயக்கவினது 2017.03.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்தித் சமரசிங்க சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. ஒத்திவைப்பு (ஐக்கிய நொடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் 2017 மார்ச் 23 ஆம் திகதிய தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 2.15 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.25 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.03 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அவ்வேளை நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே, தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி, பாராளுமன்றம் 2017 யூன் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.